# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2052/3 - 2018 ජනවාරි මස 02 වැනි අඟහරුවාදා - 2018.01.02

*2052/3 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு: MUL/LND/02/ACQVI/47.
காணி அமைச்சின் இல.: 4-3/15/2014/VE/236.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலகப் பிரிவின் தெய்யந்தர கிராம அலுவலர் பிரிவிற்குரிய பண்டித்த போருவ கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவை அதிபர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட ஆரம்பப் பட இலக்கம் 83 இல், மேலதிக இலக்கம் 16, தாள் இலக்கம் 12 வரை படத்தில் காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகளின் விபரங்கள் கீழ் தரப்பட்டுள்ளன.

*01.* **துண்டு இல. 106**
காணியின் பெயர்: கோன்கஹஹேனவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், 20 - 40 வரை வயதான தென்னை மரங்கள் 28 மற்றும் 10 வயது வரையான தேயிலை பயிர்ச் செய்கையும் கலப்புப் பயிர்ச் செய்கையும்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: தெய்யந்தர கோன்கஹஹேனவத்தவில் வசிக்கும் பேமா வீரபத்தன திஸாநாயக்க; விஸ்தீரணம்: 0.1576 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. 107**
காணியின் பெயர்: கோன்கஹஹேனவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், 20 - 40 வரை வயதான தென்னை மரங்கள் 15 மற்றும் வாழைப் பயிர்ச் செய்கையும் கலப்புப் பயிர்ச் செய்கையும்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: தெய்யந்தர கோன்கஹஹேனவத்தவில் வசிக்கும் பேமா வீரபத்தன திஸாநாயக்க; விஸ்தீரணம்: 0.0882 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு முலட்டியன பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சுசந்த அத்தநாயக்க,
பிரதேச செயலாளர்,
முலட்டியன.

பிரதேச செயலகம்,
முலட்டியன,
2017, திசெம்பர் 29.

01 - 431



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*